செ.வெ.எண்:62/ஜூன் நாள்:24.06.2016

# வெற்றிக்கதை

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில்

## தோட்டக்கலைத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தேனீ வளர்ப்பு திட்டத்தின் மூலம் அதிக மகசூல் பெற்று பயனடைந்த விவசாயி பெருமகிழ்ச்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் விவசாயத்தினை மேம்படுத்தி விவசாயிகள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடும் விதமாக வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையின் சார்பாக பல்வேறு விவசாய மேம்பாட்டு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தோட்டக்கலைத் துறையின் மூலம் காய்கறி பயிர்களில் அதிக மகசூல் அடைய ஏதுவாக மகரந்த சேர்க்கையினை அதிகரிக்க தேனீ வளர்ப்புத் திட்டம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்களது தோட்டத்தில் பயன்படுத்த ஏதுவாக தேனீ காலணி -10, தேன்பெட்டி-10, மற்றும் தேன் எடுக்கும் கருவி -1 ஆகியவற்றை 50% மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினைப் பயன்படுத்தி காய்கறி விளைச்சலில் அதிக மகசூல் பெற்று பயனடைந்த பயனாளிகள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், வழுதூர் கிராமத்தைச் சேர்ந்த பயனாளி திரு.டி.நந்தகுமார் அவர்கள் தெரிவித்ததாவது:

நான் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், வழுதூர் கிராமத்தில் 1.50 ஏக்கர் பரப்பளவில் தென்னை, படர் காய்கறிகள் மற்றும் கீரைகள் மின்மோட்டார் பாசனத்தின் மூலம் இயற்கை விவசாய முறையில் சாகுபடி செய்து வருகிறேன். எனது முன்னோர் இரசாயன உரம் இட்டு காய்கறி மற்றும் கீரை பயிர் செய்து வந்தனர். நான் மேற்கண்ட முறையில் மாற்றம் செய்ய விரும்பினேன். அதனால் இரசாயன உரம் போடாமல், தொழு உரம், மக்கிய குப்பை, மண்புழு உரம் மற்றும் ஆட்டுச் சாணம் கொண்டு காய்கறி பயிர்கள் சாகுபடி செய்ய முடிவு செய்தேன். இரசாயன உரம் பயன்படுத்தி விளையும் பயிர்களின் காய்கறியில் நச்சு பொருட்கள் உள்ளது. அதனால் எனது வயலினை நன்கு உழுது, பின்பு மக்கிய தொழு உரம் ஒரு ஏக்கருக்கு 10 டன் இட்டு நடவுக்கு தயார் செய்தேன். நட்ட பின்பு இரசாயன உரம் ஏதும் போடாமல் தொழு உரம் மட்டும் இட்டு வந்தேன்.

விதைத்த மற்றும் நடவு செய்த பயிர்களில் 30 முதல் 40 நாட்களுக்குள் வளர்ந்த களைகளை எடுத்து பின்பு மேலுரமாக மண்புழு உரம் ஒரு ஏக்கருக்கு 500 கிலோ இட்டேன். மேலும் பஞ்சகாவியம், நீரினை இலை மூலம் காய்கறி பயிரில் தெளித்தேன். பூச்சி, நோய் தாக்குவதற்கு முன்பு "வரும் முன் காக்கும்" முறையில் பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றி

வந்தேன். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் தொழு உரம் போட்டு விவசாயம் செய்து காய்கறி, கீரை மற்றும் தேங்காய் உற்பத்தி செய்து வருகின்றேன்.

நான் தோட்டக்கலைத் துறையின் ஆலோசனையின்படி காய்கறி பயிர்களில் அதிக மகசூல் அடைய, மகரந்த சேர்க்கை அதிகரிக்க தேனீ வளர்ப்புத் திட்டத்தில் தேனீ காலணி -10, தேன்பெட்டி-10, மற்றும் தேன் எடுக்கும் கருவி -1 50% மானியத்தில் தோட்டக்கலைத்துறையின் மூலம் பெற்றுள்ளேன். எனது காய்கறி பயிர் செய்துள்ள வயலில் இத்தேன் பெட்டியினை பயிர் செய்தவுடன் வைத்துவிட்டேன். பூக்கள் வந்த பின்பு எனது தோட்டத்திலும் பிற தோட்டத்திலும் உள்ள பழமரங்கள், காய்கறி பயிர்களின் பூக்களில் தேன் சேகரிக்கும் தேனீக்களின் மூலம் அயல் மகரந்தச் சேர்க்கை அதிகரித்து சுமார் 10% மகசூல் அதிகரித்துள்ளது. வருடத்திற்கு சுமார் 5 முதல் 7 கிலோ தேன் கிடைத்தது. எனது தோட்டத்தில் 10 பெட்டியில் ஒரு வருடத்திற்கு 50 கிலோ தேன் கிடைத்தது. விற்பனை விலை தேன் ஒரு கிலோ ரூ.400/- ஆகும். எனக்கு சுமார் ரூ.20,000/- 10 தேன் பெட்டி மூலம் கூடுதல் வருமானம் கிடைத்தது. தேன் பெட்டிகள் வைத்து தேனீ ஈக்கள் வளர்த்ததால் எனது தோட்டத்தில் காய்கறி பயிர்களில் அயல் மகரந்தச் சேர்க்கையின் மூலம் மகசூல் அதிகரித்துள்ளது. இத்தகைய சிறப்பான திட்டத்தினை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், இத்திட்டத்தினை எனது தோட்டத்தில் செயல்படுத்திட உறுதுணையாக இருந்த தோட்டக்கலைத்துறை அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம்